சார்பு நீதிமன்றம் அரூர், தருமபுரி மாவட்டம்

முன்னிலை : - **திரு.R.விஜயன்**,**M.A.,B.L.,**

சார்பு நீதிபதி, அரூர்

2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16 ம் நாள் வியாழக்கிழமை

**இ.நி.ம.எண்.01/2024**

**இன்**

**அசல் வழக்கு எண்.23/2024**

சுமதி .... மனுதாரர்/வாதி

**//எதிராக//**

1. K.ஜோதி
2. K.சுரேஷ்
3. K. தமிழ்செல்வன்
4. K. சரவணன்

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, என் முன்பாக 16.10.2025 ம் தேதியன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.சுப்ரமணிய சிவா,பி.எஸ்.சி.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 1,3 எதிர்மனுதாரர்கள்/1,3 பிரதிவாதிகள் தரப்பில் அறிவிப்பை பெற்றுக்கொண்டும் நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜரில்லாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினர்களாக்கப்பட்டும், 2,4 ம் எதிர்மனுதாரர்/2,4 ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினர்களாக்கப்பட்டும், மனுதாரர்/வாதி தரப்பு வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

1. மனு/தாவா சொத்துக்கள் பொறுத்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் எந்தவிதமான ஆவணங்களும் இந்த வழக்கு



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.10.16 17:06:22 +0530

முடிவடையும் வரையில் ஏற்படுத்தக்கூடாது என ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1, 2ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்: -</u>**

(i) தான் இவ்வழக்கில் வாதி ஆவேன் என்றும், தான் எதிர்வாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை கோரியும், தனி உடைமைக்கும் மற்றும் விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை தீர்வுகள் கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், தான் மற்றும் 2 முதல் 4 எதிர்வாதிகள் முறையே முதல் எதிர்வாதி மற்றும் காலம்சென்ற C.கண்ணன் ஆகியோரின் மகள் மற்றும் மகன்கள் ஆவோம் என்றும், மேற்சொன்ன C.கண்ணன் கடந்த 08.05.2021 அன்று தன்னுடைய சொத்துக்களைப் பொறுத்து எவ்விதமான விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்காமல் தன்னையும் மற்றும் 1 முதல் 4 வரையிலான எதிர்வாதிகளையும் அவருடைய உரிமை மற்றும் உடைமைகளுக்கு சட்டநிலையிலான வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும்,

(ii) வழக்கு சொத்துக்கள் அனைத்தும் தனக்கும், 2 முதல் 4 எதிர்வாதிகள் மற்றும் காலம்சென்ற C.கண்ணன் ஆகியோருக்கு பிதுராஜ்ஜிய வகையில் பாத்தியப்பட்ட பூர்வீகச் சொத்துக்கள் ஆகும் என்றும், மேற்சொன்ன தாங்கள் அனைவரும் பிரிவினை செய்யப்படாத இந்து கூட்டுக்குடும்பத்தை சார்ந்தவர்கள் ஆவோம் என்றும், ஆகவே வழக்கு சொத்துக்கள் பிரிவினை செய்யப்படாத இந்து கூட்டுக்குடும்ப சொத்துக்களாகும் என்றும், வழக்கு சொத்துக்கள் மேற்படி காலஞ்சென்ற C.கண்ணன் என்பவருக்கு கடந்த 16.05.1985 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் மூலம் ஒதுக்கப்பட்ட பூர்வீகச் சொத்துக்களை விற்பனை செய்து கிடைத்த தொகையினை கொண்டு வழக்கு



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.10.16 17:06:34 +0530

சொத்துக்களை மேற்சொன்ன காலம்சென்ற C.கண்ணன் தனது பெயரில் மேற்படி பிரிவினை செய்யப்படாத இந்து கூட்டுக்குடும்பத்தின் நலனுக்காக கிரையம் பெற்றார் என்றும், வழக்குச் சொத்தானது தனது தகப்பனார் காலம்சென்ற C.கண்ணன் தனது ஆயுட்காலம் வரை எவ்வித பாகப்பிரிவினையும் இன்றி தன்னுடனும் 2 முதல் 4 வரையிலான எதிர்வாதிகளுடனும் கூட்டு சுவாதீனத்தில் அனுபவித்து வந்து கடந்த 08.05.2021 தேதியில் காலமாகிவிட்டார் என்றும், அதற்கு பின்பு தானும், 1 முதல் 4 எதிர்வாதிகளும் இன்றுவரை எவ்வித பாகப்பிரிவினையும் செய்யாமல் கூட்டு சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வருகிறோம் என்றும்,

(iii) தனக்கு வழக்கு சொத்தில் சட்டப்படியும், நியாயப்படியும் 6/25 பங்கும், முதல் எதிர்வாதிக்கு 1/25 பங்கும், 2 முதல் 4 வரையிலான எதிர்வாதிகளுக்கு ஒவ்வொருவருக்கும் தலா 6/25 பங்கும் உரிமைப்பட்டுள்ளது என்றும், தன் கடந்த 2019-ம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து தனது தகப்பனார் காலம்சென்ற C.கண்ணன் மற்றும் 1 முதல் 4 எதிர்வாதிகளையும் வழக்கு சொத்தில் தனக்கு உரிமையுடைய பங்கினை பிரித்து தர தான் பலமுறை கோரிக்கை விடுத்தும் தன்னுடைய தகப்பனார் காலம்சென்ற C.கண்ணன் அவரின் வயது மூப்பு மற்றும் அவருக்கு வயது முதிர்வின் காரணமாக இருந்த வியாதிகளை காரணம் காட்டி இன்று, நாளை என்று கூறி பாகம் பிரித்து தராமல் தன்னுடைய ஆயுட்காலம் வரை காலம் தாழ்த்தி வந்து கடந்த 08.05.2021 தேதியில் காலமாகிவிட்டார் என்றும், இந்நிலையில் மேற்சொன்ன காலம்சென்ற C.கண்ணன் காலமடைந்ததற்கு பிறகு வழக்குச்சொத்தை 1 முதல் 4 வரையிலான எதிர்வாதிகளிடம் தனக்குரிய பாகத்தை பிரித்து தருமாறு கடந்த 2022-ம் ஆண்டு ஜூன் மாதம் கோரிய நிலையில், அதற்கு 2 முதல் 4 எதிர்வாதிகள் மறுத்துவிட்டதோடு தன்னுடைய தகப்பனாருக்கும் 2 முதல் 4 வரையிலான எதிர்வாதிகளுக்கும் இடையே ஏற்கனவே



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.10.16 17:06:38 +0530

பாகப்பிரிவினை என்ற பெயரில் பத்திரம் உண்டாக்கப்பட்டுவிட்டதாகவும், அதனால் தனக்கு வழக்கு சொத்தில் பாகம் ஏதும் தர இயலாது என கூறிவிட்டனர் என்றும், இந்நிலையில் கடந்த 23.08.2022 அன்று வழக்குச்சொத்து பொறுத்து தான் வில்லங்கசான்றிதழ் எடுத்து பார்த்த நிலையில் மேற்சொன்ன காலம்சென்ற C.கண்ணன் மற்றும் 3-ம் எதிர்வாதி ஆகியோர்கள் கூட்டாக சேர்ந்து கொண்டு கடந்த 26.02.2010 அன்று 3 ம் எதிர்வாதி பெயரில் அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.947/2010 என்ற எண்ணில் தானசெட்டில்மெண்ட் ஆவணம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளதும் பின்னிட்டு தனது தகப்பனார் காலம்சென்ற C.கண்ணன் மற்றும் 2 முதல் 4 எதிர்வாதிகள் ஆகியோர்கள் கூட்டாக சேர்ந்து கொண்டு கடந்த 18.09.2019 அன்று அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.3826/2019 என்ற எண்ணில் பாகப்பிரிவினை ஆவணம் ஒன்றை உண்டாக்கியுள்ள விபரமும் தனக்குத் தெரியவந்தது என்றும், அதனைத் தொடர்ந்து அடமானம் பத்திரம், தானசெட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் ரத்துப்பத்திரம் போன்ற ஆவணங்களை வழக்கு சொத்தில் தனக்குரிய பங்கினை தான் அடைந்துவிடக்கூடாது என்ற கெட்ட எண்ணத்திலும், தன்னை ஏமாற்றும் விதத்திலும் மோசடியாக தயாரித்துள்ளனர் என்றும், மேலும் கடந்த 26.02.2010-ல் ஏற்படுத்தப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் கடந்த 18.09.2019 அன்று மோசடியாக ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் ஆகியவை வழக்கு சொத்தில் உள்ள தனக்கு உரிமைப்பட்ட பங்கினை தான் அடைவதை எந்த விதத்திலும் சட்டத்தின் அடிப்படையில் தடுக்கவோ, மறுக்கவோ மற்றும் தன்னை கட்டுப்படுத்தவோ இயலாது என்றும்,

(iv) மேற்சொன்ன காலம்சென்ற C.கண்ணன் மற்றும் எதிர்வாதிகள் வழக்கு சொத்தில் தனக்கு உரிமைப்பட்ட தனது பங்கை தான் அடைவதை தடுப்பதற்காக கூட்டாக சேர்ந்துகொண்டு மேற்சொன்ன ஆவணங்களை ஏற்படுத்திய நிலையில்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.10.16 17:06:41 +0530

தங்களுக்குள் நிலவி வரும் இணக்கமில்லாத சூழலில் வழக்கு சொத்தின் கூட்டு சுவாதீனத்தை தொடர்ந்து எவ்வித இடையூறுமின்றி அனுபவிப்பதில் ஏற்பட்ட அசௌகரியத்தால் தான் கடந்த 10.11.2022 அன்று எதிர்வாதிகளுக்கு வழக்கு சொத்தில் தனக்கு உரிய பங்கை சுமூகமான முறையில் பிரித்து தர கோரி வழக்குரைஞர் அறிவிப்பு ஒன்றை அனுப்பினேன் என்றும், மேற்சொன்ன வழக்குரைஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்ட எதிர்வாதிகள் அதற்கு எவ்விதமான பதில் அறிவிப்பு எதையும் அனுப்பாமலும், மேலும் எதிர்வாதிகள் கடந்த 26.02.2010 மற்றும் 18.09.2019 முறையே சட்டத்திற்கு புறம்பாகவும், மோசடியாகவும் உண்டாக்கியுள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் பாகப்பிரிவினை ஆவணங்கள் அடிப்படையில் வழக்கு சொத்தில் தான் தனக்குரிய பங்கை அடைவது கடினமானது என்று வெளிப்படையாக கூறிவருகின்றனர் என்றும், தான், மேற்சொன்ன ஆவணங்கள் குறித்து கடந்த 23.08.2022 அன்று வில்லங்க சான்றிதழ் பெற்று பரிசீலித்தபோதுதான் அந்த ஆவணங்களை பற்றி அறிந்து கொண்டேன் என்றும், மேலும் மேற்சொன்ன ஆவணங்கள் ஒரு பெயரளவு ஆவணங்கள் ஆகும் என்றும், வழக்கு சொத்தில் தானும், எதிர்வாதிகளும் கூட்டுச்சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வரும் நிலையில் கடந்த 26.02.2010 மற்றும் 18.09.2019 ஆகிய தேதிகளில் சட்டத்திற்கு புறம்பாக ஏற்படுத்தப்பட்ட மேற்சொன்ன ஆவணங்கள் வழக்கு சொத்தை பொறுத்து எதிர்வாதிகளுக்கு எவ்விதமான உரிமையோ, உடைமையோ, அதன் பின்தொடர்ச்சியோ ஏற்படுத்துவதில்லை என்றும்,

(v) வழக்குச் சொத்துக்களில் தனக்கு சட்டப்படி பாத்தியப்பட்ட பங்கினை ஏமாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் எதிர்வாதிகள் அனைவரும் கூட்டு சேர்ந்து கொண்டு 3-ம் நபர்கள் பெயரில் மோசடியாக பத்திரங்களை உண்டாக்க முயற்சித்து வருவதாக தான் நம்பத்தகுந்த தகவல்களின் அடிப்படையில் அறிகிறேன் என்றும், மேலும் எதிர்வாதிகள்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.10.16 17:06:45 +0530

வெளிப்படையாகவே வழக்குச் சொத்துக்களில் தனக்குரிய பாகத்தை தான் அடைந்துவிடக் கூடாது என்பதற்காக வழக்குச் சொத்துக்களின் மீது வில்லங்கங்களை உண்டாக்கப்போவதாக சவால் விடுத்தும் வருகிறார்கள் என்றும், எதிர்வாதிகள் அனைவரும் தனக்கு வழக்குச் சொத்துக்களில் தனக்குரிய பங்கினை கொடுக்கக் கூடாது என்று பிடிவாதமாக சுமூகமான பாகப்பிரிவினைக்கு ஒத்துழைக்க மறுத்து வருகிறார்கள் என்றும், எதிர்வாதிகள் வழக்குச் சொத்துக்களில் தனக்குரிய பாகத்தைக் கொடுக்கக் கூடாது என்பதற்காக வழக்குச் சொத்துக்களின் மீது எத்தகைய வில்லங்கங்களையும் உண்டாக்கக் கூடிய அளவுக்கு செல்லக்கூடியவர்கள் என்றும், அதனால் பாகப்பிரிவினை கோரியும் 26.02.2010 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் 18.09.2019 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரம் ஆகியவை சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும் தன்னை அவை கட்டுப்படுத்தாது என்றும் விளம்புகை பரிகாரம் கோரியும் வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து எந்தவிதமான வில்லங்கங்களையும் உண்டாக்கக் கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் இந்த வழக்கினை தாக்கல் செய்ய வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றானது என்றும் மனுதாரர் தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

3. 1,3 எதிர்மனுதாரர்கள்/1,3 பிரதிவாதிகள் தரப்பில் அறிவிப்பை பெற்றுக்கொண்டும் நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜரில்லாத காரணத்தினாலும், 2,4 ம் எதிர்மனுதாரர்/2,4 ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும் தோன்றாதரப்பினர்களாக பாவிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.

**4. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

<u>தீர்வு</u> : -

5. மனு/தாவா சொத்துக்கள் பொறுத்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அரூர்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.10.16 17:06:48 +0530

சார்பதிவாளர் அலுவலகத்தில் எந்தவிதமான ஆவணங்களும் இந்த வழக்கு முடிவடையும் வரையில் ஏற்படுத்தக்கூடாது என ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1, 2ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.** மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் மனுவில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், தான் மற்றும் 2 முதல் 4 எதிர்வாதிகள் முறையே முதல் எதிர்வாதி மற்றும் காலம்சென்ற C.கண்ணன் ஆகியோரின் மகள் மற்றும் மகன்கள் ஆவோம் என்றும், மேற்சொன்ன C.கண்ணன் கடந்த 08.05.2021 அன்று தன்னுடைய சொத்துக்களைப் பொறுத்து எவ்விதமான விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்காமல் தன்னையும் மற்றும் 1 முதல் 4 வரையிலான எதிர்வாதிகளையும் அவருடைய உரிமை மற்றும் உடைமைகளுக்கு சட்டநிலையிலான வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும்,

**7.** வழக்கு சொத்துக்கள் அனைத்தும் தனக்கும், 2 முதல் 4 எதிர்வாதிகள் மற்றும் காலம்சென்ற C.கண்ணன் ஆகியோருக்கு பிதுராஜ்ஜிய வகையில் பாத்தியப்பட்ட பூர்வீகச் சொத்துக்கள் ஆகும் என்றும், மேற்சொன்ன தாங்கள் அனைவரும் பிரிவினை செய்யப்படாத இந்து கூட்டுக்குடும்பத்தை சார்ந்தவர்கள் ஆவோம் என்றும், ஆகவே வழக்கு சொத்துக்கள் பிரிவினை செய்யப்படாத இந்து கூட்டுக்குடும்ப சொத்துக்களாகும் என்றும், வழக்கு சொத்துக்கள் மேற்படி காலஞ்சென்ற C.கண்ணன் என்பவருக்கு கடந்த 16.05.1985 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் மூலம் ஒதுக்கப்பட்ட பூர்வீகச் சொத்துக்களை விற்பனை செய்து கிடைத்த தொகையினை கொண்டு வழக்கு சொத்துக்களை மேற்சொன்ன காலம்சென்ற C.கண்ணன் தனது பெயரில் மேற்படி பிரிவினை செய்யப்படாத இந்து கூட்டுக்குடும்பத்தின் நலனுக்காக கிரையம் பெற்றார்



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.10.16 17:06:52 +0530

என்றும், வழக்குச் சொத்தானது தனது தகப்பனார் காலம்சென்ற C.கண்ணன் தனது ஆயுட்காலம் வரை எவ்வித பாகப்பிரிவினையும் இன்றி தன்னுடனும் 2 முதல் 4 வரையிலான எதிர்வாதிகளுடனும் கூட்டு சுவாதீனத்தில் அனுபவித்து வந்து கடந்த 08.05.2021 தேதியில் காலமாகிவிட்டார் என்றும், அதற்கு பின்பு தானும், 1 முதல் 4 எதிர்வாதிகளும் இன்றுவரை எவ்வித பாகப்பிரிவினையும் செய்யாமல் கூட்டு சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வருகிறோம் என்றும்,

**8.** தனக்கு வழக்கு சொத்தில் சட்டப்படியும், நியாயப்படியும் 6/25 பங்கும், முதல் எதிர்வாதிக்கு 1/25 பங்கும், 2 முதல் 4 வரையிலான எதிர்வாதிகளுக்கு ஒவ்வொருவருக்கும் தலா 6/25 பங்கும் உரிமைப்பட்டுள்ளது என்றும், தன் கடந்த 2019-ம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து தனது தகப்பனார் காலம்சென்ற C.கண்ணன் மற்றும் 1 முதல் 4 எதிர்வாதிகளையும் வழக்கு சொத்தில் தனக்கு உரிமையுடைய பங்கினை பிரித்து தர தான் பலமுறை கோரிக்கை விடுத்தும் தன்னுடைய தகப்பனார் காலம்சென்ற C.கண்ணன் அவரின் வயது மூப்பு மற்றும் அவருக்கு வயது முதிர்வின் காரணமாக இருந்த வியாதிகளை காரணம் காட்டி இன்று, நாளை என்று கூறி பாகம் பிரித்து தராமல் தன்னுடைய ஆயுட்காலம் வரை காலம் தாழ்த்தி வந்து கடந்த 08.05.2021 தேதியில் காலமாகிவிட்டார் என்றும், இந்நிலையில் மேற்சொன்ன காலம்சென்ற C.கண்ணன் காலமடைந்ததற்கு பிறகு வழக்குச்சொத்தை 1 முதல் 4 வரையிலான எதிர்வாதிகளிடம் தனக்குரிய பாகத்தை பிரித்து தருமாறு கடந்த 2022-ம் ஆண்டு ஜூன் மாதம் கோரிய நிலையில், அதற்கு 2 முதல் 4 எதிர்வாதிகள் மறுத்துவிட்டதோடு தன்னுடைய தகப்பனாருக்கும் 2 முதல் 4 வரையிலான எதிர்வாதிகளுக்கும் இடையே ஏற்கனவே பாகப்பிரிவினை என்ற பெயரில் பத்திரம் உண்டாக்கப்பட்டுவிட்டதாகவும், அதனால் தனக்கு வழக்கு சொத்தில் பாகம் ஏதும் தர இயலாது என கூறிவிட்டனர் என்றும்,



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.10.16 17:06:55 +0530

இந்நிலையில் கடந்த 23.08.2022 அன்று வழக்குச்சொத்து பொறுத்து தான் வில்லங்கசான்றிதழ் எடுத்து பார்த்த நிலையில் மேற்சொன்ன காலம்சென்ற C.கண்ணன் மற்றும் 3-ம் எதிர்வாதி ஆகியோர்கள் கூட்டாக சேர்ந்து கொண்டு கடந்த 26.02.2010 அன்று 3 ம் எதிர்வாதி பெயரில் அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.947/2010 என்ற எண்ணில் தானசெட்டில்மெண்ட் ஆவணம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளதும் பின்னிட்டு தனது தகப்பனார் காலம்சென்ற C.கண்ணன் மற்றும் 2 முதல் 4 எதிர்வாதிகள் ஆகியோர்கள் கூட்டாக சேர்ந்து கொண்டு கடந்த 18.09.2019 அன்று அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.3826/2019 என்ற எண்ணில் பாகப்பிரிவினை ஆவணம் ஒன்றை உண்டாக்கியுள்ள விபரமும் தனக்குத் தெரியவந்தது என்றும், அதனைத் தொடர்ந்து அடமானம் பத்திரம், தானசெட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் ரத்துப்பத்திரம் போன்ற ஆவணங்களை வழக்கு சொத்தில் தனக்குரிய பங்கினை தான் அடைந்துவிடக்கூடாது என்ற கெட்ட எண்ணத்திலும், தன்னை ஏமாற்றும் விதத்திலும் மோசடியாக தயாரித்துள்ளனர் என்றும், மேலும் கடந்த 26.02.2010-ல் ஏற்படுத்தப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் கடந்த 18.09.2019 அன்று மோசடியாக ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் ஆகியவை வழக்கு சொத்தில் உள்ள தனக்கு உரிமைப்பட்ட பங்கினை தான் அடைவதை எந்த விதத்திலும் சட்டத்தின் அடிப்படையில் தடுக்கவோ, மறுக்கவோ மற்றும் தன்னை கட்டுப்படுத்தவோ இயலாது என்றும்,

**9.** மேற்சொன்ன காலம்சென்ற C.கண்ணன் மற்றும் எதிர்வாதிகள் வழக்கு சொத்தில் தனக்கு உரிமைப்பட்ட தனது பங்கை தான் அடைவதை தடுப்பதற்காக கூட்டாக சேர்ந்துகொண்டு மேற்சொன்ன ஆவணங்களை ஏற்படுத்திய நிலையில் தங்களுக்குள் நிலவி வரும் இணக்கமில்லாத சூழலில் வழக்கு சொத்தின் கூட்டு சுவாதீனத்தை தொடர்ந்து எவ்வித இடையூறுமின்றி அனுபவிப்பதில் ஏற்பட்ட அசௌகரியத்தால் தான்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.10.16 17:06:59 +0530

கடந்த 10.11.2022 அன்று எதிர்வாதிகளுக்கு வழக்கு சொத்தில் தனக்கு உரிய பங்கை சுமூகமான முறையில் பிரித்து தர கோரி வழக்குரைஞர் அறிவிப்பு ஒன்றை அனுப்பினேன் என்றும், மேற்சொன்ன வழக்குரைஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்ட எதிர்வாதிகள் அதற்கு எவ்விதமான பதில் அறிவிப்பு எதையும் அனுப்பாமலும், மேலும் எதிர்வாதிகள் கடந்த 26.02.2010 மற்றும் 18.09.2019 முறையே சட்டத்திற்கு புறம்பாகவும், மோசடியாகவும் உண்டாக்கியுள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் பாகப்பிரிவினை ஆவணங்கள் அடிப்படையில் வழக்கு சொத்தில் தான் தனக்குரிய பங்கை அடைவது கடினமானது என்று வெளிப்படையாக கூறிவருகின்றனர் என்றும், தான், மேற்சொன்ன ஆவணங்கள் குறித்து கடந்த 23.08.2022 அன்று வில்லங்க சான்றிதழ் பெற்று பரிசீலித்தபோதுதான் அந்த ஆவணங்களை பற்றி அறிந்து கொண்டேன் என்றும், மேலும் மேற்சொன்ன ஆவணங்கள் ஒரு பெயரளவு ஆவணங்கள் ஆகும் என்றும், வழக்கு சொத்தில் தானும், எதிர்வாதிகளும் கூட்டுச்சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வரும் நிலையில் கடந்த 26.02.2010 மற்றும் 18.09.2019 ஆகிய தேதிகளில் சட்டத்திற்கு புறம்பாக ஏற்படுத்தப்பட்ட மேற்சொன்ன ஆவணங்கள் வழக்கு சொத்தை பொறுத்து எதிர்வாதிகளுக்கு எவ்விதமான உரிமையோ, உடைமையோ, அதன் பின்தொடர்ச்சியோ ஏற்படுத்துவதில்லை என்றும்,

**10.** வழக்குச் சொத்துக்களில் தனக்கு சட்டப்படி பாத்தியப்பட்ட பங்கினை ஏமாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் எதிர்வாதிகள் அனைவரும் கூட்டு சேர்ந்து கொண்டு 3-ம் நபர்கள் பெயரில் மோசடியாக பத்திரங்களை உண்டாக்க முயற்சித்து வருவதாக தான் நம்பத்தகுந்த தகவல்களின் அடிப்படையில் அறிகிறேன் என்றும், மேலும் எதிர்வாதிகள் வெளிப்படையாகவே வழக்குச் சொத்துக்களில் தனக்குரிய பாகத்தை தான் அடைந்துவிடக் கூடாது என்பதற்காக வழக்குச் சொத்துக்களின் மீது வில்லங்கங்களை



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.10.16 17:07:03 +0530

உண்டாக்கப்போவதாக சவால் விடுத்தும் வருகிறார்கள் என்றும், எதிர்வாதிகள் அனைவரும் தனக்கு வழக்குச் சொத்துக்களில் தனக்குரிய பங்கினை கொடுக்கக் கூடாது என்று பிடிவாதமாக சுமூகமான பாகப்பிரிவினைக்கு ஒத்துழைக்க மறுத்து வருகிறார்கள் என்றும், எதிர்வாதிகள் வழக்குச் சொத்துக்களில் தனக்குரிய பாகத்தைக் கொடுக்கக் கூடாது என்பதற்காக வழக்குச் சொத்துக்களின் மீது எத்தகைய வில்லங்கங்களையும் உண்டாக்கக் கூடிய அளவுக்கு செல்லக்கூடியவர்கள் என்றும், அதனால் பாகப்பிரிவினை கோரியும் 26.02.2010 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் 18.09.2019 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரம் ஆகியவை சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும் தன்னை அவை கட்டுப்படுத்தாது என்றும் விளம்புகை பரிகாரம் கோரியும் வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து எந்தவிதமான வில்லங்கங்களையும் உண்டாக்கக் கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் இந்த வழக்கினை தாக்கல் செய்ய வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றானது என்றும் மனுதாரர் மனுவில் கூறியுள்ளார்.

11. மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலினை செய்யப்பட்டது. அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் பாகப்பிரிவினை கோரியும், தனி சுவாதீனம் கோரியும், விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/வாதிகள் மனுவில் கூறக்கூடிய சங்கதிகளை பொறுத்து முழு விசாரணைக்கு பிறகு தான் மனுதாரர்கள்/வாதிகள் கோருவது போல தாவா சொத்துக்களை பொறுத்து அவருக்கு உரிமை உள்ளதா என்று தீர்மானிக்க முடியும். ஆகவே மனுதாரர்கள்/வாதிகள் இந்த மனுவில் கோரியுள்ள பரிகாரம் தற்போதைய நிலையில் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. நீதியின் நலனை கருத்தில் கொண்டு இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.10.16 17:07:06 +0530

12. **இறுதியாக,** இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் உடனுக்குடன் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16 ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.10.16 17:07:10 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.

**<u>இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** :-

-- இல்லை --

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.10.16 17:07:13 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.